

நாகை மாவட்டம் நாகை மாவட்டக் கழக அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கும் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மாவட்ட கழகப் பொருளாளர் மு.லோகநாதன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சேலம் மத்திய மாவட்டம், ஓமலூர் சட்டமன்றத் தொகுதி, தாரமங்கலம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ராஜா.அய்யப்பனின் மகன் திருமண வரவேற்பு விழாவில் சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் இரா.இராஜேந்திரன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் மாவட்டக் கழக பொருளாளர் கார்த்திகேயன், செயற்குழு உறுப்பினர் ராஜேந்திரன், இ.ஜி.சுகவனம் மற்றும் ஒன்றியக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

# முதலமைச்சர் ஆனதையே ஜோசப் விஜய் மறந்து விட்டார்!

## முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேட்டி!

அரியலூர், ஜூன்.7-

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழா அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்டம் முழுவதும் மிக எழுச்சியோடு கொண்டாடப்பட்டது. இதன் முதல் நிகழ்ச்சியாக மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரத்ததான முகாமில், இரத்ததானம் செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டிய அரியலூர் மாவட்ட செயலாளர், முன்னாள் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது பேசிய அவர், நடிகர் விஜய், முதலமைச்சர் விஜய் ஆனதையே மறந்துவிட்டார். நன்றி அறிவிப்பு கூட்டம் என்ற பெயரில், தேர்தல் பிரச்சாரக் கூட்டமாக உரையாற்றினார். தினமும் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் இருக்கையில் அமர்ந்திருப்பது மாத்திரமே முதலமைச்சரின் பணி என, விஜய் நினைத்துக் கொண்டிருக்கிறார்.

24 மணி நேரமும் தமிழ்நாட்டின் நிலையை கண்காணித்து அதற்கு ஏற்ப செயல்பட வேண்டும். அதற்கு உதாரணமாக செயல்பட்டவர்தான் முத்துவேல் கருணாநிதி மு.க.ஸ்டாலின் அவர்கள். எந்த நிமிடத்திலும் எந்த அமைச்சரும், அதிகாரிகளும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தொடர்புகொண்டு ஆலோசனை பெறுவர்.

அச்சு காட்சி ஊடகங்கள் சமூக வலைதளங்களில் வருகின்ற செய்திகளை அவரே கண்காணித்து,



என்ன செய்ய வேண்டும் என்ற அறிவுரையை எங்களுக்கு வழங்குவார். ஆனால் இன்றைய முதலமைச்சரோ, காலை 9:00 மணி முதல் மாலை 4 மணி வரை தலைமைச் செயலகத்திற்கு வந்து செல்வதையே முதலமைச்சர் பணியாக கருதுகிறார்.

மாலை நேரத்தில் விஜய் வீட்டுக்கு சென்ற பின்னர், அவரது கட்சிக்காரர்கள் கூட சந்திக்க முடியாத நிலை உள்ளது. தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது? என்பதை யாருக்கும் தெரியாத நிலை உள்ளது. மிகக்குறிப்பாக சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது.

இதை எதிர்க்கட்சி என்ற முறையில் நாங்கள் கூட அதிகம் விமர்சிக்க தொடங்கவில்லை. மக்கள் களத்திலிருந்து விமர்சிக்க தொடங்கி விட்டனர். சென்னையில் 24 மணி நேரமும் மின்சாரம் இன்றி சாலைகளில் த.வெ.க.வுக்கு வாக்கு கேட்ட பெண்கள்கூட, கைக்குழந்தையிடம் உலா வரும் காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவுகிறது.

பொதுமக்களே களத்தில் இறங்கி போராடும் சூழலில், விஜய் இன்னமும் அவகாசம் கேட்கிறார். அவகாசம் கேட்பது என்பது புதிய திட்டங்கள் அறிவித்து நிறைவேற்றுவதற்காக தான். மக்கள் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு அல்ல.

சட்டம் ஒழுங்குக்கு பங்கம் விளைவிப்பது த.வெ.க. வினர் தான். எந்த குற்றங்களை திமுக மீது சுமத்தி ஆட்சிக்கு வந்தார்களோ? அந்த பாலியல் குற்றங்களை தவெகவினரே செய்யும் செய்தி தினம் தோறும் வருகிறது.

ஆட்சி பொறுப்பு என்பது கிரீடம் என விஜய் நினைத்துக் கொண்டுள்ளார். அது முள்கிரீடம். அதை உணர்ந்து முதலமைச்சரும், அமைச்சரும் செயல்பட வேண்டும்.

விஜய் திருச்சியில் நன்றி அறிவிப்பு கூட்டத்தில் பேசிய தொனியை பார்க்கும்போது அவர் இன்னமும், கத்தி மற்றும் தெறி படத்தில் நடித்ததை போன்று நினைத்துக் கொண்டுள்ளார். வாயில் வந்திடும் எனவும், நான் என்ன ? என டேஷ் போட்டு பேசுகிறார். அவற்றையெல்லாம் நிரப்பினால் மிக தரக்குறைவாக இருக்கும்.

த.வெ.க. விர்ச்சுவல் வாரியர்சே இதை கண்டித்து ரீல்ஸ் போடுகின்றனர். வெளி உலக தொடர்பே இல்லாத காரணத்தினால் விஜய்க்கு இது எதுவும் தெரியவில்லை. விஜயின் ஸ்கிரிப்ட் ரைட்டர்கள் என்ன எழுதி தருகின்றனரோ, திரைப்படம் போன்று ஆக்சன், ரோல் சொன்னதும் ஒப்பிக்க தொடங்குவாரோ, அதே போன்று மேடைகளிலும் தற்பொழுது வந்து ஒப்பித்து செல்கிறார் விஜய்.

அப்போதும் சில வார்த்தைகள் தடுமாறி அது தூர்ந்து போன சக்தி என பேப்பரை பார்த்து என்று சொல்கிறார். விஜய் மனதில் இருப்பதை பேச முன் வந்தால் மட்டுமே மக்களின் நிலை உணர்ந்து பேச முடியும். எவரோ எழுதிக் கொடுத்த ஸ்கிரிப்ட் ஐ பேசினால் வீட்டில் சென்று ஓய்வு தான் எடுக்க முடியும்.

தனிச்சின்னத்தில் போட்டியிட அனுமதி இல்லை என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்த கருத்து குறித்த கேள்விக்கு...

ம.தி.மு.க. துவங்கியது துரதிஷ்டவசம்தான். அவர் காலம் முழுக்க துரதிஷ்டவசமாகவே செல்கிறது அவர்தான் அது குறித்து முடிவெடுக்க வேண்டும்.

த.வெ.க.வின் போக்குவரத்துத் துறையின் அமைச்சர்களின் செயல்பாடுகள் குறித்த கேள்விக்கு...

இந்த ஆட்சி அமைந்த உடனேயே இப்படிப்பட்ட முடிவு வந்துவிட்டது என மன அழுத்தத்தில் எல்லோரும் இருந்தோம்.

தற்பொழுது எங்களுக்கெல்லாம் மிகப்பெரிய ரிலீஃபே இந்த அமைச்சர்கள் தான். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக நாங்கள் ரிலாக்ஸ் செய்யும் வாய்ப்பை த.வெ.க. அமைச்சர்கள் தந்துள்ளனர்.

அதில் ஒவ்வொரு ஜோக்கர் அமைச்சரும் அவகளுக்கே உரிய பாணியில் செயல்பட்டுள்ளனர், அதிலும் இன்றைய போக்குவரத்து துறை அமைச்சர் பணி இன்னும் அவர்களின் பணியை பார்க்க வேண்டி உள்ளது அதனால் அவசரப்பட்டு விமர்சிக்க விரும்பவில்லை என மேனாள் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கூறினார்.

## தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்

# செஞ்சி பணிமனை தொ.மு.ச. சார்பில் கலைஞர் பிறந்தநாள் விழா!

### மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார்!

செஞ்சி, ஜூன் 7–

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103 வது பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறதுஅந்த வகையில்விழுப்புரம் வடக்கு மாவட்டம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் செஞ்சி பணிமனை தொழிலாளர் முன்னேற்ற சங்கம் சார்பில்முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103 வது பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

செஞ்சி பணிமனை எதிரில் நடைபெற்றநிகழ்ச்சிக்குதொமுச துணை பொது செயலாளர் லூர்து இமானுவேல் தலைமை தாங்கினார். ஓட்டுநர் சங்க செயலாளர் ஹரிகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார்.

நடத்துனர் சங்க செயலாளர் தியாகராஜன், தொழில்நுட்ப செயலாளர் காதர் நவாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொ டர்ந்து பொது மக்களுக்குஇனிப்பு வழங்கி 500 மேற்பட்ட நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை அவர் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,ஒன்றிய நிர்வாகிகள் வாசு ,அய்யாதுரை,முன்னாள் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ரிஸ்வான் தொமுசநிர்வாகிகள்தமிழ்மணி, ராஜேந்திரன், கிருஷ்ணகுமார் உள்ளிட்ட தொழிலாளர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## சோம்பேறித்தனம் – சொகுசு அரசியல் –

# அடகு போகும் மாநில உரிமை! டம்மி முதல்வரே எப்போது செயல்படுவீர்?

### த.வெ.க. அரசுக்கு கழக தகவல் தொழில்நுட்ப அணி சரமாரி கேள்வி!

சென்னை, ஜூன்.7–

சோம்பேறித்தனம், சொகுசு அரசியல் அடகு போகும் மாநில உரிமை, டம்மி முதல்வரே, எப்போது செயல்படுவீர் என்று கழக தகவல் தொழில்நுட்ப அணி த.வெ.க, அரசுக்கு சரமாரி கேள்வி எழுப்பியுள்ளது.

இது குறித்து கழக தகவல் தொழில்நுட்ப அணி எழுப்பிய கேள்விகள் வருமாறு :–

நேத்து பெய்த மழையில் இன்னைக்கு முளைத்த விஷக்காளான் நீங்க!

மக்கள் போராட்டங்களுக்காக ஒரு நாள் கூட வெயிலில் நின்று பழகாத, வியர்வையைப் பார்த்தாலே ‘அய்யய்யோ’ எனப் பதறும் ஒருவர் திடீரென்று ‘அரசியல்’ வேஷம் போட்டுக்கொண்டு வந்திருக்கிறார்.

சொந்தமாக 118 சீட்டுகளைக் கூட வெல்ல வக்கில்லாமல், அசிங்கப்பட்டு, அவமானப்பட்டு, ஆட்சியைப் பிடிக்கக் கூட்டணி கட்சிகளிடம் பிச்சை எடுத்த சோபாவின் புகழ் ”குதிரை பேர சி.எம் தானே நீங்க! உங்களுக்கு எங்களைப் பற்றிப் பேச என்ன தகுதி இருக்கிறது?

அட்மினிஸ்ட்ரேஷனில் ‘அ’ கூடத் தெரியாத, எந்த அடிப்படை அரசியல் அறிவும் இல்லாத ஒரு தற்குறியின் கையில் அதிகாரம் சிக்கியிருப்பதால் தான், இன்று சட்டம் ஒழுங்கு சந்தி சிரித்து மாநிலம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது!

அரசியலமைப்பு நெறிமுறைகளோ, மாநில உரிமையோ கொஞ்சமாவது தெரிந்திருக்கிறதா உங்களுக்கு?

முதலமைச்சராகப் பதவியேற்கும் முதல் நாளிலேயே, தமிழ்த்தாய் வாழ்த்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு ‘வந்தே மாதரத்தை’ முதலில் வாசிக்க விட்டு, கைகட்டி, வாய் பொத்தி வேடிக்கை பார்த்த சுயமரியாதை யற்ற சி.எம் தானே நீங்க!

அமைச்சர்கள் பதவியேற்பு விழாவிலும் இதே அவமானம் இரண்டு முறை தொடர்ந்ததே, அதைத் தட்டிக்கேட்கத் துப்பில்லாத தொடைநடுங்கி சி.எம் தானே நீங்க?

வழக்கம்போல மைக்கைப் பிடித்து ஆடியோ லான்ச் மாதிரி கத்த வந்தப்போ, ஆளுநர் ”ஜஸ்ட் வெயிட் என்று முகத்திலேயே அடித்த மாதிரி சொன்னபோது, ரோஷமில்லாமல் வாயடைத்து நின்ற நபர் தானே நீங்க!

மாநில மானத்தை ஆளுநரிடம் தான் அடகு வைத்தீர்கள் என்றால், மாநில உரிமையைக் கர்நாடகாவிடம் பறிகொடுத்து நிற்கிறீர்கள்!

”தமிழ்நாட்டில் இப்போது உட்கார்ந்திருப்பது ஒரு டம்மி சி.எம்; அவரால் எங்களை எதுவும் எதிர்க்க முடியாது, நாங்க மேகதாது அணையைக் கட்டியே தீருவோம் என்று கர்நாடகா துள்ளிக் குதித்துக் கொக்கரிக்கிறது.

தமிழ்நாட்டின் உயிர்நாடியான காவிரி உரிமையைக் காக்கத் துப்பில்லாமல், அண்டை மாநிலத்துக்காரன் முகத்தில் கரியைப் பூசும்போதும் திருப்பிப் பேசத் தைரியமில்லாத கையாலாகாத சி.எம் நீங்க!

மாலை ஆறு மணிக்கு மேல் கேரவனுக்குள்ளும் ஏசி ரூம்குள்ளும் ஒளியும் உங்களுக்கு மக்களின் வலி என்ன தெரியும்? புயல், வெள்ளம் என்று மக்கள் தவித்தபோதோ, உரிமைக்காகப் போராடியபோதோ ஒரு நாளாகிலும் களத்திற்கு வந்தீர்களா?

சொகுசு வாழ்க்கையில் காலத்தைக் கழித்து விட்டு, திடீரென்று ‘ரட்சகர்’ மாதிரி வரும் இந்த ‘டூரிஸ்ட் அரசியல்வாதி’க்கு மற்றவர்களைப் பற்றிப் பேச என்ன அருகதை இருக்கிறது?

சொந்தப் பொறுப்புகளையே தட்டிக்கழிக்கும் ஒரு சோம்பேறியால் கோடிக்கணக்கான மக்களைக் காப்பாற்ற முடியுமா வெட்டி சி.எம்?

தேர்தல் பிரச்சாரத்தில் குழந்தைகளைப் பயன்படுத்தக் கூடாது என்ற குறைந்தபட்ச சட்ட விதிகளோ, அறிவோ கூட இல்லாத மக்கு சி.எம் நீங்க! கொள்கையை வைத்து ஓட்டுக் கேட்க வக்கில்லாமல், பிஞ்சுக் குழந்தைகளைத் தூண்டிவிட்ட உங்களது அரசியல் வறுமையும் கோழைத்தனமும் தான் உங்களது அக்மார்க் ‘நாறசக்தி’ அரசியல்!

ஆட்சியைப் பிடிப்பதற்காக நீங்க செய்த குதிரை பேர அரசியலையும், உங்களது காப்பி–பேஸ்ட் அரசியலையும் மூடி மறைக்க எங்களை வம்புக்கு இழுக்காதீங்க!

இந்தச் சோம்பேறித்தனமான சொகுசு அரசியலையும், மாநில உரிமையை அடகு வைக்கும் கோழைத்தனத்தையும் இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள். இல்லையென்றால், மக்கள் உங்களை அரசியலை விட்டே அடித்து விரட்டுவார்கள்.

அள்ளிவிட்ட வாக்குறுதிகளை உருப்படியாகச் செய்யப் பாருங்கள்; இல்லையென்றால் உங்களது வக்கற்ற, திறமையற்ற அரசு வெகு விரைவில் மக்களால் தூக்கியெறியப்படும்!

இவ்வாறு சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளது கழக தகவல் தொழில்நுட்ப அணி.

## இது மக்கள் ஆட்சியா.. இல்லை ரீல்ஸ் ஓட்டும் ஆட்சியா?” தேர்தல் வாக்குறுதிகளை மறந்த த.வெ.க. முதலமைச்சரே

# வசனம் பேசுவதை விடுத்து மின்வெட்டு, சட்டம் ஒழுங்கைச் சரி செய்யுங்கள்!

## கோவையில் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேட்டி!

கோவை, ஜூன் 7–

இது மக்கள் ஆட்சியா.. இல்லை ரீல்ஸ் ஓட்டும் ஆட்சியா?” தேர்தல் வாக்குறுதிகளை மறந்த த.வெ.க. வசனம் பேசுவதை விடுத்து மின்வெட்டு, சட்டம் ஒழுங்கைச் சரி செய்யுங்கள் என்று செய்தியாளர்கள் சந்திப்பில் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கூறினார்.

செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி வருமாறு:-

**கேள்வி:** முதலமைச்சர் பேசும் போது தி.மு.க. மீது தான் குற்றச்சாட்டு வச்சு தொடர்ந்து விமர்சித்து வருவது பற்றி!

**பதில்:** திரையில் வசனங்கள் பேசலாம். திரைத்துறையில் வசனங்கள் பேசலாம். திரைப்படங்களில் வசனங்கள் பேசலாம். ஒரு அரசு பொறுப்பேற்று முதலமைச்சராக பொறுப்பேற்ற காலத்திற்குள் என்ன அவசர தேவைகள் இருக்கிறது? என்ன அத்தியாவசிய தேவைகள் இருக்கிறது என்பதை உணர்ந்து செய்ய வேண்டியது இந்த அரசினுடைய கடமை. எங்களுடைய கழகத் தலைவர் 2021ம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்கின்ற பொழுது கொரோனா காலம் மிக மோசமான ஒரு சூழலில் இருந்த அந்த நிலையில் வெற்றி பெற்றவுடன் அரசு பொறுப்பேற்பதற்கு முன்பாகவே அரசு அதிகாரிகளை அழைத்து, அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அவர்களோடு கலந்து ஆலோசித்து பல்வேறு சீரிய நடவடிக்கைகளை எடுத்ததன் மூலமாக அன்னைக்கு தமிழ்நாடு மக்கள் காப்பாற்றப்பட்டார்கள். இன்று பொறுப்பேற்றிருக்கக்கூடிய அரசு தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது குற்றச்சாட்டுகளை வைப்பதில் மட்டுமே குறியாக இருக்கின்றார்களே தவிர மக்களுக்கு சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தவில்லை. அந்தந்த துறையினுடைய அமைச்சர்கள் துறையினுடைய ஆய்வுக் கூட்டங்களை நடத்தி அந்த துறையை எப்படி எடுத்துச் செல்லலாம் என்பதில் கவனம் செலுத்தவில்லை. அதற்கு மாறாக முதலமைச்சர் உட்பட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது குற்றச்சாட்டுகளை சுமத்துவதில் மட்டுமே குறியாக இருந்து கொண்டிருக்கின்றார்கள். திராவிட மாடல் அரசு எங்களுடைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கிய வரலாற்று சிறப்புமிக்க திட்டங்கள் மக்கள் இன்றும் நினைவில் வைத்திருக்கின்றார்கள். இன்றும் அதை நினைவில் வைத்து எங்களுடைய கழகத் தலைவருக்கு தொடர்ந்து ஆதரவை வழங்குவதற்கு மக்கள் தயாராகத்தான் இருக்கின்றார்கள். இந்த புதிய அரசை பொறுத்தவரைக்கும் குறைகளை சொல்வதை விட்டு விட்டு மக்களிடத்தில் செய்ய வேண்டிய திட்டங்களை முன்னெடுப்பது அவர்களுக்கு இந்த நேரத்தில் அவர்கள் செய்ய வேண்டிய அந்த பணிகளை மறந்து வசனங்களை பேசிக் கொண்டிருக்கின்றார்கள். திருச்சியில் கூட பொதுக்கூட்டங்கள் நன்றி அறிவிப்பு கூட்டம் என்று சொல்லிட்டு தி.மு.கவை குறை சொல்றதுதான் குறியா வச்சிருக்காங்க தவிர செய்ய வேண்டிய நடவடிக்கைகளை, அவங்க எடுக்க வேண்டிய முன்னெடுப்புகளை செய்யறதுக்கு அவங்க ஒன்னும் செய்யல. இதற்கு எங்களுடைய துணை பொதுச் செயலாளர் ராஜா எம்.பி., மிகத் தெளிவான ஒரு புள்ளி விவரத்தை கொடுத்திருந்தாங்க. இந்த அரசாங்கம் மீது மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டார்கள். அரசு தவறு செய்கின்ற பொழுது அதனை சுட்டிக்காட்டுவது எதிர்க்கட்சிகளின் கடமை அதை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்தார்.



**கேள்வி:** கோவை மாவட்டத்திற்கு தற்போது இரண்டு அமைச்சர்கள் இருப்பது பற்றி!

**பதில்:** முதலில் அவர்கள் என்ன திட்டங்களை முன்னெடுக்கிறார்கள், என்ன கொள்கைகளில் உள்ளார்கள் என்று பார்க்க வேண்டும், மாற்றம் என்று கூறி மக்களை ஏமாற்றி வெற்று கவர்ச்சியில் மக்களிடம் ஓட்டுகளை வாங்கியுள்ளார்கள் என்றும் மாற்றம் என்றால் என்னவென்று முதலில் அவர்கள் கூற வேண்டும்.

கல்வி, மருத்துவம், தொழில் துறை ஆகியவற்றில் மாற்றம் என்று அவர்கள் கூறுகிறார்கள் கல்வி மற்றும் மருத்துவத்தில் தமிழ்நாடு ஏற்கனவே முதலிடத்தில் தான் உள்ளது.

**கேள்வி:** மகளிர் பாதுகாப்பு படையை அமைப்பேன் என்று முதல்வர் கூறிய நிலையில் மூன்று முறை அதை தள்ளி போட்டு உள்ளார்கள் – இது பற்றி

**பதில்:** சூலூர் சம்பவம் அனைவருக்கும் தெரியும் இவ்வாறான சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளில் நடவடிக்கை எடுப்பதற்கு ஆறு மாத காலம் பொறுத்திருக்க வேண்டுமா?

எங்கள் கழக தலைவர் ஆட்சியில் மின்வெட்டு இல்லாத ஆட்சியாக இருந்தது, ஆனால் தற்பொழுது மின்வெட்டு காரணமாக பல்வேறு இடங்களில் மக்கள் போராட்டங்கள் நடைபெற்று வருகிறது. இவ்வாறான சூழலில் மின்சாரத்துறை அமைச்சர் உடனடியாக இதுகுறித்து அதிகாரிகளுடன் ஆய்வு கூட்டங்களை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். விளையாட்டுத்துறை அமைச்சர் எங்கள் கழகத் தலைவர் துவக்கி வைத்ததை ஏதோ புதிதாக துவக்கியதை போல அறிவிக்கிறார். என்றும் நாங்கள் பொறுப்பேற்கும் பொழுதே மின்சாரத் துறையில் ரூ 1.5 லட்சம் கோடி கடன் இருந்தது வருடத்திற்கு 15,000 கோடி வட்டி கட்ட வேண்டி இருந்தது என்றும் வசனங்களையும், கருத்துக்களையும் பேசுவதை விட்டுவிட்டு துறையையும், அரசையும் நல்ல முறையில் எடுத்துச் செல்ல வேண்டும், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், மேலும் போதைப் பொருட்கள் என்னென்ன மாநிலங்கள் வழியாக வந்தது அதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்று எங்களுடைய முதல்வர் விளக்கம் அளித்திருந்தார் ஆனால் தற்பொழுது உள்ள அரசு என்னென்ன முயற்சிகளை முன்னெடுத்துள்ளது என்பதை கூற வேண்டும்.

த.வெ.க. எவ்வளவு கீழ்த்தரமாக பேச முடியுமோ அவ்வளவு கீழ்த்தரமாக பேசுகிறார்கள், தேர்தலுக்கு முன்பு டாஸ்மாக் விஷயத்தில் அவர்களது நிகழ்ச்சிகளில் மோசமாக பாட்டு பாடினார்கள் என்பது அனைவருக்கும் தெரியும் ஆனால் தற்பொழுது டாஸ்மாக் விவகாரத்தில் எவற்றை கட்டுப்படுத்தி விட்டார்கள்? என்றும் கேள்வி எழுப்பினார். தேர்தலுக்கு முன்பு வண்டி மீது ஏறி நின்று பொய்யான கருத்துக்களை கூறி அவதூறு பரப்பி பாட்டு எல்லாம் பாடினார்கள் ஆனால் டாஸ்மாக் விவகாரத்தில் தற்பொழுது வரை அந்த துறையின் அமைச்சர் விளக்கத்தை மட்டுமே கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்றும் அப்படி என்றால் அன்று பாடிய பாட்டுக்கு என்ன பதில் என்று கேள்வி எழுப்பினார்.

யோசிக்காமல் வாக்குறுதிகளை கொடுத்துள்ளார்கள் அதனை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளையாவது எடுத்திருக்க வேண்டும் என்றும் என்னை பொருத்தவரை தவெக என்பது ரீல்ஸ் ஆட்சி இன்னும் அவர்கள் ரீல்ஸ் மோகத்தில் தான் உள்ளார்கள் அமைச்சர்களும், அரசும் ரீல்ஸ் மோகத்தில் தான் உள்ளது மக்களுக்கான ரியல் ஆட்சியாக இன்னும் அவர்கள் பணிகளை துவக்க வில்லை அவர்கள் பணியை துவக்குவார்கள் என்ற நம்பிக்கையும் மக்களிடத்தில் இல்லை என்று தெரிவித்தார்.

அண்ணாமலை புதிதாக கட்சி துவங்குவதாக தகவல்கள் வெளியாவது தொடர்பான கேள்விக்கு அது போன்ற ஒரு தகவல் எனக்குத் தெரியவில்லை அவர் அவ்வாறு ஆரம்பித்தால் அதை பற்றி பேசலாம் என்று தெரிவித்தார்.

மேலும் தொழில்துறை அமைச்சர் ரீல்ஸ் மூலம் எவ்வளவு முதலீடுகளை ஈர்க்கிறார்? எவ்வளவு ஒப்பந்தங்கள் கையெழுத்து ஆகிறது? எத்தனை பேருக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட போகிறது? எத்தனை கோடி தமிழ்நாட்டில் முதலீடு செய்யப் போகிறார்கள் என்று பொறுத்திருந்து பார்க்கலாம், பல்வேறு அமைச்சர்கள் கூறுவதைப் போலவே ஒரு மாத காலம் காத்திருந்து பார்ப்போம் தொழிலாளர்களின் பிரச்சினைகளை எல்லாம் சரி செய்து விடுவார்களா என்று பொறுத்திருந்து பார்க்கலாம் என்று தெரிவித்தார்

இந்த நிகழ்வில், கோவை மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன், மாநகராட்சி மேயர் கா.ரங்க நாயகி ராமச்சந்திரன், பகுதி கழக செயலாளர் பசுபதி, பொதுக்குழு உறுப்பினர் மு.ம.ச.முருகன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# வரலாற்று நெடுந்தொடர் கலைஞர்!



பண்பாட்டுப் பகலவனே!
பார் போற்றும் தமிழ் மகனே!
திராவிடத்துத் திரவியமே!
திக்கெட்டும் ஒளியாகி
தமிழர் திசையாகி நின்றவனே!

உழைப்பாலே பூமியுனை
சுற்றி வர வைத்தவனே!உன்
கரகரத்த குரலாலே
காந்தத் தமிழ் செய்தவனே!
உன் ஈர்ப்பு விசை தானே
எம் இனத்தின் வரலாறு!

நீ பிறந்த போது
உன் கையில் தமிழ்க்கொடி
இருந்திருந்தால்
தொப்புள் கொடியில் கூட
கொடியேற்றி மகிழ்ந்திருப்பாய்..!

எம் தலைவா!
நீ தமிழர் திசையெங்கும்
லட்சம் கொடியேற்றி
லட்சிய கொடியேற்றி
கொடிகம்பங்களை எல்லைகளாக்கி
தமிழ் மொழியினம் பாதுகாத்தாய்!
தமிழரை வாழ வைத்தாய்!

முடிவேயில்லாத
வரலாற்று நெடுந்தொடர் நீ !!

உனக்கே ..... உனக்கே ....
இடமில்லை என்றார்கள்
மூன்றாவது அணுகுண்டு வீசப்படாமல்
உலகம் அதிர்ந்தது!

உன்னை தனக்குள்
புதைத்து கொள்ள அல்ல
விதைத்துக்கொள்ள
அன்றைய நாளில்
உலகத்தமிழர்களின்
அத்தனை இதயமும்
மெரினா கடற்கரையாய்
மாறிய அதிசயம் நிகழ்ந்தது!

நீ பூக்களை வென்றவன்!
குவளை மலர்கள்
சுருக்கலில் கண் மலரும் முன்னரே
விழித்தெழுந்து பூக்களை வென்றவன்!

காதுகளால் படித்தவன்!

பெரியார், அண்ணா
பேச்சை கேட்டே
பேரறிவு பெற்றவன்.முத்தமிழ் அறிஞனானாய்!

கண்களால் பேசியவன்
சூரியப் பார்வையால்
தமிழராட்சியை பிரகடனம் செய்தவன் நீ!

**கு.வாஞ்சிநாதன்**
**தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளர்**
**கடலூர்**

